அநாதிநம.

# திவ்விய இரட்சகர்பேரில்

# பிள்ளைத்தமிழ்.

இஃது,

வயளைவ

ம-ள-ள-ஸ்ரீ. பிரான்சீஸ்குப்பிள்ளைப்

புலவரவர்களா லியற்றப்பட்டு

அதிசிரேஷ்டானுமதியுடன்

யாழ்ப்பாணம்

அச்சுவேலி யந்திரசாலையிற்

பிரசுரிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

1904.

5

அநாதிநம.

# திவ்விய இரட்சகர்பேரில்

# பிள்ளைத்தமிழ்.

## காப்பு.

### வெண்பா.

சிந்தைகூர் வெல்லைத் திருவரைவாழ் சிற்பார்க்குச்
சந்தமார் பிள்ளைத் தமிழ்சாற்றச்—சுந்தரஞ்சேர்
தாதைசுத னிஸ்பிரீத்துச் சாந்தொன்றாய் வாய்ந்தபரன் ... 1
காதலுறு பொற்சரணங் காப்பு.

### விருத்தம்.

குவலயத் தவரன்பு கொண்டாட வண்டாடு
குளிர்மலர்ப் பொழில்களாடக்
கோலமயி லாடவய னீடுகுயி லாடநெற்
குலைகல கலென்றாடிடக்
கவலையுற றிடுமாயர் களியாட விளவாழை
கனிநீடு தளிர்களாடக்
காராடு மொய்குழலி னாராட வழகணைய
கனிநீடு பனிநீராடத்
தவில்முர சடித்துமவர் சபையாட நவகோடி
சனமாட விளமைகொணிலாத்
தண்ணிழல் பரந்தாட விண்மணி யொடுங்கிரண
தாரகை தயங்கியாடத்

005370

சிவலையமு தைப்பருகு தெய்வீக பாலனே
செங்கீரை யாடியருளே
திருமருவு பரமகனி மரியுதவு பாலனே
செங்கீரை யாடியருளே, ... (2)

(வேறு)

அந்த மிருந்தா விந்த முகந்தநல்
லண்டர்கள் வெண்டயிர்பால்
அலீமல ரொடுசிறு மறிகளு முறைமுறை
அடியிணை தொழவாசக்
கொந்தவிழ் வெலைவரை யின்சிறு குடிலிடை
கோவிரு பால்மேவக்
குலமணி களினொளி பளிரென விலகிய
குளிர்நில வொளிவீசச்
சுந்தர மணிமகு டம்புனை மன்னர்
சுகந்தபி ஷேகம்டுபான்
தூபங் கொண்டிணை மேவுஞ் சரண்மலர்
துதிசெய் தேதூவச்
சந்த மிருங்கனி தங்கிடு பாலா
தாலோ தாலேலோ
தவிதிறை புதல்வி தருஞ்சிறு பாலா
தாலோ தாலேலோ. ... (3)

(வேறு)

முப்பெயரு முப்பெயரோ ரொப்பரிய தற்பரமு
மூப்புரமோ டெப்பொருளுமாய்



முத்தொழிலு மத்தொழிலி னித்திய வனுக்கிரக
முச்சுடரோ டெச்சுடருமாய்
அப்பொழுது மிப்பொழுது மெப்பொழு தினுக்கு
முள வளவினள வறியுமளவி
லானந்த மானபரி பூரணம' தாகியே
அண்டபகி ரண்டமுழுதுங்
துப்புறை மலர்க்கைமு விரற்கொண்டு தாங்கிநீள்
துங்கலங் காரமேவு
ஆயபர லோகநகர் வாசனே மாசிலாத்
தொல்லோ னெனுஞ்சுதபரா
தப்பில்நன் மறைக்குரிய பொற்பாத பற்பமலர்
சப்பாணி கொட்டியருளே
சத்யநித் தியஞான சுத்தபரி பாலனே
சப்பாணி கொட்டியருளே. ... (4)

வங்கக் கடற்குள்வளர் சங்கத்தின் முத்தமும்
மதகரட கரிமருப்பின்
வளர்முத்தமுங்கன்னல் விளைமுத்தமுஞ்சென்னெ
ல் மதியனைய கதிர்முத்தமும்
வெங்கட்பொறிப்படம் விளங்குபைந் தலையரவின்
மிளிர்சோதி பொழிமுத்தமும்
வேமுத்தமும்மிடைய வெய்யில்விடுமெய்ஞ்ஞான
வேலைக்குள் விளைவெய்தியே
துங்கச் சுடர்க்கிரண சோதிவெண் படிகத்
துறுங்கத வினைத்துறந்தே
தொல்வினைத்தொடரறுத் தெல்லையில்பெருங்கதித்
துறைதருஞ் சுருதிமுத்தாம்

005370

திங்கட் பதாம்புயச் செல்விபெறு சிறுவவுன்
செஞ்சரண முத்தமருளே
செகமதனை ரட்சிக்க வருகுமர குருபரா
செஞ்சரண முத்தமருளே. ... (5)

[வேறு]

ஆதி சத்தியமெய்ஞ் ஞான சுத்தபரி
பாலவுத்தமகோ பாலனு
யாக்கை சேர்புருவை காக்கு மாறுகரு
தரியஞானமு தருத்தியே
எத முற்றமனு வோரை ரட்சைசெய
வெண்ணிமண் மிசையி ராறெனும்
ராச வர்க்கமதி லோர் மகத்துவம
தாயுதித்தகனி யாஸ்திரி
தீத கற்றுமட மாதர் பொற்பெலாஞ்
சித்ரிக்கருமரிய முத்தினின்
திரு வயிற்றினிடை கரு வெடுத்தினிய
சிலைவிளங்குமொரு மலைவளங்
காத லுற்றகும ரேச ருக்கினிய
கவினியற்றியவ ராணையே
கனக மொய்த்தமணி பணி யழுத்தியிடு
கவினியற்றியவ ராணையே. ... (6)

(வேறு)

களபபரி மளமிருக மதமிளகு புழுகோடலில்
கலவைமலை யசமதழகார்
குளிகொள்புய வரைதழுவ வெழுதுமதகளிறனைய
களமர்தள மொடுகுழமியே



வளவயலினுழுகொழுவினெளியுமொளிரினவளைக
ள் மருள்கொடுளை தரளமதனை
மதியமென வளர்குவளை பொதியுநகைமுகையவிழ
வரியளிகள் பிரசநுகரும்
குளமளையுமெழில்கொளிள வாழைதாழையினெடுங்
குலைசிதற மலையுமலைமேற்
குடவர்குடமொடுவிடைக ளடைகுடிலினிடைகொ
டிய குளிர்கொடுடல் கொடுகவளரும்
அளவையென மழலைமொழி பழகுகுரு பரகுமர
அம்புலீ யாடவரவே
அருவருவ சொரூபமென வருமொர்குரு பரகுமர
அம்புலீ யாடவரவே. ... (7)

(வேறு)

மாணிக்கமணியணிகொள்சேணிற்கிரணங்கொள்வயி
டூர்யவளை வைத்துவைச்ர
மரநிரைத் துசிதகோமேதக வரிச்சிட்டு
மாற்றேற வேவடித்த
ஆணிப்பொன் னின்றக டுக்கிமர கதமணியி
ஞல்மேடை கட்டியளவி
லாரத்தி ஞல்விதா னித்தமரர் பண்செய்யு
மாறிலட் சணசொரூபா
சேணிற் சிறந்தசெழு மாடகூ டங்களின்
சிங்காரம் விட்டுவறிதே
செந்துக்கள் முறைகொடுறை யந்திக்குளேபழைய
சிலைக்கு ளேபொதிந்து

பேணிக் கிடக்கின்ற பிள்ளையே யுள்ளமது
பெற்றதொரு சிற்றிலிதுவே
பேரின்ப மேவியுறை நீரின்ப மாகவே
பெற்றதோர் சிற்சிலிதுவே, ... (8)

அளவறுமெஞ்ஞான சுடர் பொழிகிரணவொளிபெ
ருகி யடிமுடிக டெரியவரிதா
யாதியா யாதியி னநாதியது வாயதற்
கப்புற மனந்தாதியாய்
இளமைமுதுமையுமட்டு மிடருமொரு தொடர்பி
லா வேகதெய்வீகமேயா
யிகபர மெலாமர சியற்றியன் புறமேவு
மெந்தைபர மைந்தவிடர்கூர்
பழவினை யகற்றியுயர் பரகதி பெறற்குரிய
பரமகுரு வெனவுருவதாய்
பருவரையி னிற்கருணை மரிமகவெ னப்பழகு
பாலபரி பாலவுலகோர்
தெளிதரு மறைப்பொருளை வெளியுற விரைத்து
ரைசெய் சிறுபறைமுழக்கியருளே
சினைமல ரணைங்கைகொடு மணிவளை தழைத்திடு
மொர் சிறுபறைமுழக்கியருளே. (9)

மருமேவு சொற்கவன் மதின்மா மரக்கனியுண்
வலுபாவ் வக்ரமமதால்
வராநாலிழக்குமத முடனே யெமக்குமடர்
வடுமா றிடத்தயவதாய்த்



திருமேவு தற்பரமு மனுஷிக வுற்பவமு
மொருதேக முற்றுலகுளோர்
சிறைமீள்வ தற்குமற வறுஞான சுத்தவொளி
திகழ்வீதி விட்டுமெகிழ்வாய்
விரைமேவு பற்மபத சரணார முட்செடிகல்
மிருபாதையிற்புகுவதோ
வினையே னுளத்துரிய அனுசார புட்பமலர்
வெகுவாய் நிரப்பியதிலே
தெருமே விடிற்றரும வருமே விடற்குரிய
சிறுதேருருட்டியருளே
திரிலோக வட்டவழி வலசாரி யிட்டுவரு
சிறுதேருருட்டியருளே- ... 10

## சிலுவைவிருத்தம்.

தாலத்த்தம்பழைய காலத்தெதிர்ந்திலகு
சாலத்தகுங் குளிர்நிலாத்
தவழ்பச்சிளந்தளிர்க டுவளப்பெரும்பொழில்கி
டன்கனியின் வன்கனியெனும்
ஆலத்தை யுண்டவர்க ளாலொக் கருங்கிளைக
ளாசுற்ற சாபத்தைவென்
ருருழய வீரவம ராடியிமை யோர்புகழு
மாண்மைகொண் மணிச்சிலுவையாம்
மாலுய்த்த வன்கிரியின் மேலத்த னன்றுகொலு
வாயுய்த்து நின்றுவடிவாம்
மாகத் தெழுந்துலகர் காணப் பரிந்துகடு
வாகச் சிறந்துவயமார்
சீலத் துயர்ந்ததிதெய் வீகத்தவன்றனொடு
சீவித்து மாபத்திகூர்
திருநெற்றி வரைசித்ர மிகுசத்ரு செயமுற்ற
திகழ்முத் திரைச்சிலுவையே. ... 1

பொன்பொலி புரம்பர விடும்பரமன் முன்பயில்
புயம்பொலிய நின்றசிலுவை
பூச்சக்ர வாளமுழு தும்புகழ் பரப்பியொளிர்
பூரணம தானசிலுவை
கொன்பயி லதங்குல விடுங்குழி திறந்துகுடி
லங்கொள நிமிர்ந்தசிலுவை
கோரநர கோரமிக கோரமது தீரவரு
கோதில்பொன் மணிச்சிலுவையாம்
வன்பொலிமதங்கெட வருந்திருமெய்ஞ் ஞானமே
னு மாமறை வழங்குசிலுவை



வர்னவன் விலாவொடிரு கால்கைபெரு ஞானருவி
வாரவடி வானசிலுவை
மின்பயில் தருஞ் சம்மன சும்பர்திசை நின்றெமது
வேதன்முன் விடுத்தசிலுவை
வெற்றிதிகழ் நெற்றிபுனை வுற்றருள்செய் நற்றயவு
மிக்கதொரு பொற்சிலுவையே. ... 2

## தேவமாதாவின்பேரில் விருத்தம்.

திருமருவுபரஞான திவ்யகிருபாகரி
திரிலோக ராசேஸ்பரி
தினகரோதையகஞ் சுகத்திவானவர்தங்கள்
சிரமருவு சிங்காசனி
உருமருவுகிரணசந் திரபாதலட்சணி
உயர்முனிவர்பணிதெட்சணி
உசிதசம்பனவிரச மதுபொதிந்தொபூகியொளி
யுற்றதொரு ரோசமலராம்
மருமருவுதன்மகுண மாருதசெல்வமுள
மன்னர்வங்கிஷபதியுமாய்
வானவன்சொலுமங் களங்கேட்டலங்கிருத
மாய்நின்ற மணிவிளக்காந்
தருமருவுசோலைசூழ் வயவைநகருயவந்த
தருமசுந்தரமரியம்மாள்
தமனியச்சிங்கா சனத்தெழுந்தருளினள்
சரணமல ரடிபரவுவாம். ... (1)

சீரேறுமணிமகுட மன்னர்கை செய்துய்ய
செழுமலர்த் திரள்களேறத்
திருவேறமருவேறு தேசிகர்கள்பூசைபுரி
தீபதூபங்களேறக்
காரேறுகலகலகை மெலிவோடிருள்கதுவியெரி
கனல்நரக புரமதேறக்
கற்பேறுமடவாசி பொற்பேறுமெய்ஞ்ஞான
கருணைக்கடாக்ஷமேற
ஏரேறுபருதிதா ரகையிந்திணைந்தேற
எண்ணில்வானவர்கள்பாடு
மிசையேறவசைவில்தூ ரியமுழவுபேரிகை
யியம்பலெண்டிசையுமேறத்
தேரேறுராசரா சன்றவிகுலத்துவரு
திவ்யகனி மரியமாதாச்
சிங்காசனத்தேரி லேயெழுந்தருளினர்
செஞ்சரணமலர்துதிசெய்வாம். ... (2)

திருவுண்டு மருவுண்டு சிறுசந்ர பிறைநின்று
தெளிவுண்டு களிகொண்டபூ
சேணுடர்சிரமுடியின் மேனீடுபெறவணி
சிறந்தொளி நிறைந்துவளர்பூ
தருவுண்டு வளரண்ட முகடொன்று படநின்று
தலமெங்கு மலர்கின்றபூ
தாதாடு ரோசவா சப்பூ வெனுந்திருச்
சஞ்சீவியானபொற்பூ
அருவுண்ட கணமஞ்சி யழல்மண்டி விழவுஞ்செய்
தசைகொண்டு இசைகின்றபூ



ஆனுசி யுதரமதில் ஞானோ தயங்கொண்ட
வற்புதமதானபொற்பூ
கருவுண்டு வருமெந்தை பரமைந்தனைக்காய்த்த
கமலமல ரான்பூவே
கவலைபல பிணிகள்பல கழியநல கருணைபுரி
கவின்ரோச மரியபூவே. ... (3)

ஆணிப்பொன் னிற்பொதியு மாணிக்கமேகற்பி
னுதிக்கமாமிக்கதோர்
அருமறைப்பெட்டியே பனிமயக்கட்டியே
அருள்ஞானதீவட்டியே
சேணிற்சிறக்குநீள் பானிலா வட்டமே
செகசோதியின்திட்டமே
தீவினைகள்நட்டமே பாவிகளினிட்டமே
தெய்வீகவரசட்டமே
காணக்கண்ணாயிரம் வேணுமேயீறிலெக்
காலகாலத்துமழியாக்
கருணைசரெச்சமே நரகோர்களச்சமே
கருதுமடியார்கள்பட்சமே
பாணிக்கை கொண்டவுன் ஞானக்குமாரனைப்
பார்த்துமன்றாடியருள்கூர்
பரலோகபூலோக பாக்கியராக்கினியான
பரிசுத்தமரியதாயே. ... (4)

## தேவமாதாவின்பேரில்

### அறுபத்துநான்கடிச்சிந்து.

பல்லவி

மதுர ரசவுசித மணமலரதமிசை
மிர்த்வகனி மரியன்னைவந்தாள்—பாவியைத்தேடி
மிர்த்வகனி மரியன்னைவந்தாள்.

அனுபல்லவி,

மதுர ரசவுசித மாகனிசெந்தா
மரைமலரிலகிய சரணிதிதந்தாள்
அதிபரகதிநகரரசுபுரந்தாள்
ஆதிக்கமாகியசெஞ்சோதிப்பிரகாசமுள்ள ... மது

சரணங்கள்,

அத்தனுதியானந்தன் புத்திரி
அருவருவசொருபமாகிய சுதனெனுஞ்
சத்தியநாதன்தாயான மகத்துவி
தருநவபெலவர மிகுபிரசாதபரி
சுத்தவிஸ்பிரீத்துச்சாந்தின் பத்திரி
துகடீர்மூவருமோரே பரமதிரீத்துவ
கத்தன்றன்னாலயமாங்கனகஸ்திரி
கருதருமதமேவை நுகர்தருகனியின்
வன்பவதுன்பமகற்றவளங்கொடிசைந்தாள்
மலர்போலரும்பிய
வின்பவானுசி யின்றிருவுதரமிருந்தாள்
இருடீரவந்தொரு



பெண்கொடியாம்பிரபலந்தருமிந்துபிறந்தாள்
பிரதானமேவிய
பொன்பொலிநகரை யெனும்புரமீனுவதிந்தாள்
புகழ்சேரனின்ற
சுரருலகருபிகள் விரைகமழ்சரணிணை
சிரமிசைமருவுமோர்துங்கம்—சுருதிநூல்வழங்கிய
சரிகமபதநிதவெனுமியல்தெரிதரு
சரிமறைமுறைபயில் சங்கம் — சலதிசூழ்வசுந்தரை
நரர்பரகதிநகர்செலும்வழி ஒளிகொள
நவமுறவருமொருபந்தம் — நாலிரண்டான
வரைபொரு கருமுகில் சொரிபிரளயசலம்
அதில்நோவைவிடுமொருவங்கம்—மண்பீறிவான
மண்டலமுட்டக் கொம்பிட்டின்பப் பைந்தளிரிற்செய்
செம்பொனெழுத்துச்சோலை—சமுதாயமேவிய
இம்பரர்மெய்ச்சிப் பண்பயில்சித்ரத்
தம்புருகொட்டிக்கும்பிடவைத்தசாலை—அனுதினமும்
நம்பினர்கட்குச்செம்பதுமப்பதகஞ்சமலர்த்துணை
தம்பமெனத்தருவேலை—நறைவீசுஞான
வும்பவிழ்சந்தக்கொந்திற்றந்திற் சிந்தனைவைத்து
மந்த்ரத்தைச்சொன்மாலை — வானோர்குழாங்கள்
பரமக்கியானஞ்சொல்லும் பவுஷொத்தபாடி
கருணைக்கடாட்சநிறை கமலக்கண்ணாடி
விரகப்பசாசின்கையால் மீட்கெம்மைநாடி
அருமைத்திருமகனோ டன்பாய்மன்றாடி ... மதுர

வாசங்கமழும்புட்பரோசி
வளரிளமதிதொடு கழலிணைகளினொளி
வீசுந்தெய்வீகப்பிரகாசி
விரிகதிர்மணிமுடி யரசர்கள்பணிசெயும்
ராசாதிராசமகராசி
இருவிதிமதிபரகதிதரவருமதி

நேசம்விளங்கும்விசுவாசி
நெறிமுறைபொறையறிவினிலொருகுறைவறு
கற்பினிலற்பளவுக்கழிவற்றிடுபொற்பூக்
கவின்கொள்வேதப்
பத்துரைவைத்தெழுதப்படுதற்கொருசெப்புப்
பண்ணீடுமாதர்கள் னநீடு
மெய்ச்சியவழகுவ மீக்கரிதாமோர்வியப்பு—மெய்ஞ்ஞா
தற்பரையாமிவள் நற்செயலுக்கெவரொப்புத்
தவமோசேகண்ட
தருவின்முள்ளெரியவிள்ளருமிலைகருகா
ததின்நவமருளிடமுன்னி—தளராதெழுந்த
விருளகலிடவருகிரணரவியைமெய்யி
விடரறவுரைதருவர்னி—ஈனப்பேயென்னுங்
கரிநிறவலகைகள் எரிசொரிநரகுசெல்
கடுவழியடைதருகன்னி—கரைகாண்கரிய
விரததிபதிதுதிபுரிபரமரகசிய
விமலபிஷேகமெனுமின்னி—வேதாந்தரூப
சுத்தத்துச்சுத்தத்திக்கற்புத
வுற்பத்திக்குச்சற்புத்ரக்கற்றாணி—தூயதாதையாமதி
யுத்தமயக்கோவுக்குச்சொற்கத்
துச்சத்துக்கண்ணுற்றுக்கண்டவேணி-ஒழியாதசெல்வ
முத்திக்குச்சித்திரித்துப்பற்ம
வத்தத்திற்கொத்திட்டுச்செய்முத்தாணி—முதிராஞ்சு
தத்தத்தின்ரட்சைக்கொப்பித்துப் சொல்பிரிய
பட்சத்தைக்கொள்வஸ்துகாமெஸ்திராணி—விரிநீர்பர
புனிதக்கடலினிடை பொன்றுநட்சேத்திரம் ந்த
இனிமைக்கியல்புதரு மின்பானநேத்திரம்
அணையிற்சிறந்தருள்செய்யன்பானபாத்திரம்
தனிமைக்கிரங்கியருள் தந்தாளாரோக்கியம் ... மதுர

சென்மபவமில்லாத தேகம்
தெளிதருகளியமுதுறைகனதிரைபொரு



நன்மைச்சலதியின்பிரவாகம்
நலிவறவுலகுயிருயவருடருமழை
மின்னிப்பெய்யுங்கிருபாகரமேகம்
விடிவெள்ளியெனவோர்பன்னிருமன்னர்மரபினி
லுண்மைக்கருவாய்வந்த யோகம்
உயர்வெல்லைமாமலையினில்முல்லையார்களின்
குடிற்குளம்பரர்க்கமு தருத்தியதேயிவள்கொங்கை
கொடிபோலுநீண்ட
விடப்படப்பணித்தலைமிதித்துடைத்தழித்தனள்நஞ்சை
விண்மீதிலங்கு
முடுக்குலங்களிற்சிலமுடிக்கிசைவாக்கினசங்கை
உளம்வாடிநொந்து
இடுக்கணுற்றவர்தமக்கடைக்கலமாய்வருநங்கை
ஏகாந்தமான
இளமையின் வழமைகொண்டுளமகிழ்வுறவழ
கிசையுமூவிசைகதிசென்றாள்—இன்பமதான
களபமோடகில்பரிமளமிருகமதமலர்
களின்விரைமுழுவதும்விண்டாள்—கதிர்கால்நின்று
பளிர்பளிரெனநிலவுமிழ்சுடர்மணிவெயில்
படியுமெய்வடிவதைவென்றாள்—பல்லூழிகாலம்
அழிவளவறுகதியமலர்மூவருமதி
கலர்முடிதொடவணிகின்றாள்—அஞ்ஞானமற்ற
அங்கிஷமொத்து மங்கலமுய்த்த மின்பரிசுத்தத்
தின்பர்சப்பெறுபேறின்—அருள்கூர்சஞ்சூசை
செங்கமலக்கைக் கம்புதுளிர்த்துப் (மோதும்
பொங்கலர்புட்பிக் கும்பிரபுத்துவகாரி— திவ்யபோத
பங்கமிலர்ச்சிய சங்கர்களுக்குச் (கமீது
சிந்தைகளிக்கச் செஞ்சொல்நயப்பிற்கூறிப்—பரலோ
சங்கமிழைக்குமிங்கிதரத்னச்சிங்கணையிற்செய்
மென்றவிசிற்சென்றேறிச்—சருவராக்கினியெனத்
திரிபுவனரசுசெய்திடுமிந்திரசாவி
திருமகிருவூலசலாக்கியனுகூலி

வறுமைதவிர்க்கவரும் மங்காதசீலி
சர்வசனர்க்குமொரு சஞ்சீவமூலி ... மதுர

---

## இரட்சகர்பேரில் வெண்பா.

ஞானந்தா நன்மை நயந்தார் நயந்தசிந்தைக்
கீனந்தான் சேரா திருங்கதிதா—மீனஞ்சூழ்
சேகரத்தி வானவர்கள் சேகரத்தி திவ்வியகிரு
பாகரத்தி பாலா பரிந்து.

## இரட்சகர்பேரில்கலித்துறை.

பர்ரஞ்சுநஞ்சு படரும்பழப்பகை யைப்பறிக்கக்
கோரஞ்செய்யூதர் கொலைக்கிசைந்தே கழுவாங்குருசில
சீரஞ்சுங்கொண்ட திருத்தாள்விலாவொடுன்செங்கை
ஓரஞ்சுகாயம்மறவேன் மனத்தொருகாலமுமே. (

005370